**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் பிப்ரவரி 2020-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் :** 71

**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 2**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு வாரியாக தினந்தோறும் பெறப்படும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து தருவதற்கும் , நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள சொத்துவரி, குடிநீர் வரி, காலியிட வரி மற்றும் இதர வரிகளை செலுத்துவதற்கும் துப்புரவு ஆய்வாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்வதற்கு புதிதாக ஒலிபெருக்கி (3 எண்ணிக்கைகள்), மைக் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி, பொது சுகாதார வாகனத்தில் பொருத்துவதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளி 20.02.2020 அன்று பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,சேலம் மெயின் ரோடு, மேட்டூர் டேம் | ரூ.28,350/- |
| 2. | JVK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம் | ரூ.31,650/- |
| 3. | ஸ்ரீ ஜோதிமுருகன் மோட்டார் ஒர்க்ஸ் | ரூ.32,850/- |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,சேலம் மெயின் ரோடு, மேட்டூர் டேம்** அவர்களின் விலைப்புள்ளியை பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி–15ன் கீழ்** விலைப்புள்ளி ஏற்று, பணி உத்தரவு வழங்கி, பணி முடித்து, தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.231/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் :** 72

**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 3**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலக வளாகத்தின் தெற்கு பகுதியில் சத்திரம் சாலையில் சாலையை ஆக்கிரமித்து பூக்கடைகள் உள்ள காரணத்தால் சாலையின் வாகன போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறு ஏற்படுவதுடன் அருகில் பேருந்து நிலையம் உள்ளதால் பாதசாரிகள் மற்றும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது. நகராட்சிக்கு மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதிலிருந்து வருமானம் வராத காரணத்தினால், சாலையின் அகலத்தை அதிகப்படுத்தவும், நகராட்சி வருவாயினை உயர்த்த வேண்டிய நோக்கத்திலும், நகராட்சி அலுவலகத்தில் காலியாக உள்ள இடத்தில் ஐந்து கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது. இந்நிகழ்வின் பேரில் மேற்கண்ட இடத்தில் ஐந்து கடைகள் அளவுகள் 10”0” X 8”0” (3.05m X 2.44m) கட்டிடம் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 345/2020/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மேற்கண்ட பணியினை 2020-2021 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் வருவாய் மற்றும் மூலதன நிதியில் பணி மேற்கொள்ளலாம்.

ஆ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் :** 73

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2019–2020ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள், குழாய் உடைப்புகள் சரி செய்ய 2020 – 2021-ம் ஆண்டிற்கான பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக 20.03.2020 அன்று முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் மற்றும் நகராட்சிக்குட் பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள், குழாய் உடைப்புகள் சரி செய்ய 2020 – 2021ம் ஆண்டிற்கான பராமரிப்பு பணி | 8.00 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் | 1.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.08% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**(ந.க.எண். 183 /2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 74

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்

<u>பொருள் எண்</u> : 5

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2019–2020ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மின் மோட்டார்கள், ஆழ்குழாய் கிணற்றின் மின் மோட்டார்கள், நகராட்சிக் கட்டிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரி செய்யவும், 2020 – 2021ம் ஆண்டிற்காக பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக 20.03.2020 அன்று முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மின் மோட்டார்கள், ஆழ்குழாய் கிணற்றின் மின் மோட்டார்கள், நகராட்சிக் கட்டிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரி செய்யவும், 2020 – 2021ம் ஆண்டிற்காக பராமரிப்பு பணி | 8.00 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் | 2.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.05% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 197/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 75

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண்</u> : 6**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2019–2020ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.16, நகராட்சி கல்யாண மண்டபத்தில் உள்ள தங்கும் விடுதியில் மராமத்து பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல் பணி மேற்கொள்வதற்காக 24.03.2020 அன்று முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.16, நகராட்சி கல்யாண மண்டபத்தில் உள்ள தங்கும் விடுதியில் மராமத்து பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல் பணி | 8.10 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் | 2.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 262/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 76

**தீர்மானம்** அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020—ஆம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண்</u> : 7**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2019—2020ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.23,24 மற்றும் 25 பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக 24.03.2020 அன்று முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.23,24 மற்றும் 25 பழுது மற்றும் பராமரிப்பு பணி | 7.90 இலட்சம் | திருமதி.வள்ளியம்மாள் பு.புளியம்பட்டி | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.புனிதவதி புன்செய்ப் புளியம்பட்டி | 2.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.1 % குறைவாக வழங்கியுள்ள திருமதி.வள்ளியம்மாள், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.42/2020/அ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 77

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண்</u> : 8**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு சேவைவரி (GST) ஐ செப்டம்பர் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை PM Associates சத்தி, இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்தமைக்கான கட்டணம் ரூ.17226/- வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 78

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண்</u> : 9**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி 2019–2020ல் கீழ்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம், ஈரோடு அவர்களின் ந.க.எண்.1469/2019/அ3 நாள்.13.02.2020–ஆம் தேதியிட்ட செயல்முறையில் வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 20.03.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்ட விபரப்படி விலை விகிதம் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு எண்.7 அண்ணா நகரில் அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி | 8.50 இலட்சம் | M/s. வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் | 4.90% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | | | திரு.சிதம்பரம் புளியம்பட்டி | 7.00% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதால் M/s.வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலையினை விட குறைத்துத்தரக் கோரி இவ்வலுவலக 24.03.2020இல் கடிதம் வழங்கப்பட்டதை ஒப்பந்ததாரர் பெற்றுக் கொண்டு 26.03.2020ஆம் தேதியன்று M/s.வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் அவர்கள் தனது இசைவுக்கடிதத்தில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01 %க்கு குறைத்து பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளார். எனவே மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01 % குறைவாக பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கியள்ள M/s.வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.202/2020/இ1)**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 79

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 26.03.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண்</u> : 10**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் கணினி வரிவசூல் மையத்தில் தினசரி வசூல் செய்யப்படும் தொகைகள் சரிபார்க்கப்பட்டு, பாதுகாப்பாக தனி அறையில் வைத்து பூட்டுவதற்கு தனியாக Cash Locker (Godrej Centiguard (Model 1060) தேவைப்படுகிறது. மேற்கண்ட Godrej நிறுவனமானது தயாரிப்பு நிறுவனமாக இருப்பதால் நேரடியாக Cash Locker (Godrej Centiguard (Model 1060) கொள்முதல் செய்யவும், மேலும் இந்நிறுவனமானது கோயமுத்தூர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டுமே நேரடி விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார். மேலும் நமது நகராட்சி கோயமுத்தூரிலிருந்து **50** கி.மீ தொலைவில் இருப்பதால் அதற்குண்டான போக்குவரத்து செலவினத் தொகை ரூ. **3813.55** என்றும் விலைப்புள்ளியில் தெரியப்படுதியுள்ளார். எனவே Cash Locker (Godrej Centiguard (Model 1060) வாங்குவதற்கு வங்கி வரைவோலை ரூ.**61686.50**க்கு எடுத்து அனுப்புவதற்கும் (Godrej நிறுவனத்திற்க்கு) போக்குவரத்து செலவினத்திற்கு **(** Delivery and Erection Charges ) ரூ.**5000.00**க்கும் குறைவாக இருப்பதால் Future Era நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.371/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி வருவாய் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் :** 80
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.